JUDICIAL OFFICIAL

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 196/2017 |
| Prosecution Witness | : | **அ.சா.17** |
| Name | : | **சண்முகம்** |
| Father's/Husband Name: | : | ராசு |
| Address : | : | 360 நேரு நகர், சேந்தமங்கலம், திருவாரூர் மாவட்டம். |
| Age | : | 71/2022 |

தேதி: 26/05/2022

**முதல் விசாரணை :** சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

நான் தமிழ்நாடு காவல்துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த கடந்த 31/03/2010 ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்று, தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரிலும், நான் பணிபுரிந்த அலுவலகத்தில் பராமரிக்கப்படும் ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியம் அளிக்கிறேன். நான் கடந்த 29/10/2005 ஆம் தேதி பெரம்பலூர் வணிகவியல் குற்றப்பிரிவு ஆய்வாளராக பணிபுரிந்த போது, இதே பிரிவில் எனக்கு முன்பு காவல ஆய்வாளராக பணியாற்றிய ஜெயமோகன் என்பவர் தற்போது இறந்துவிட்டார். 21/07/2005 ஆம் தேதி அவர் பொறுப்பில் இருந்த போது, காலை சுமார் 7.00 மணியளவில் சென்னை வணிகவியல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து அலுவலக ந.க.எண்.9272/சி2/சி.சி.ஐ.டபள்யூ/2005, நாள் 07/07/2005-ன்படி இணைத்து வந்த புகாரினை பெற்று, பெரம்பலூர் CCIW குற்ற

எண்.10/2005, இதச பிரிவுகள் 408, 477-A-ன்படி வழக்கு பதிவு செய்து, விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.96.** பிறகு புகார்தாரர் என். முருகன் அவர்களை அவருடைய அலுவலகத்திற்கு சென்று, அவரை விசாரித்தும், ஆவணங்களை சரிபார்த்தும், சம்பவம் நடந்தது உண்மையென தெரியவந்ததால், வழக்கின் எதிரியை தேடி, விசாரித்த போது, எதிரி லட்சுமணன் த/பெ. மாணிக்கம் என்பவரை குன்னம் மெயின்ரோட்டில் 21/07/2005 காலை 11.00 மணிக்கு காரணம் கூறி கைது செய்து, நிலையம் கொண்டு வந்து, திரேக பரிசோதனை செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்து, நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். அதன் பிறகு சாட்சிகள் முருகன், ராமலிங்கம், தர்மன், போர்மன்னன், சாந்தப்பன், சந்தோஷம், மலர்செல்வி, ரெங்கதாஸ், ராமசாமி, சின்னசாமி, பூங்கோதை, அய்யம்பெருமாள், பூங்கோதை க/பெ.அருணாசலம், சரஸ்வதி, பூங்காவனம், செங்கமலம், மணி, கற்பகம், பாலகிருஷ்ணன், அண்ணாமலை, பூராசாமி, சண்முகசுந்தரம், அஞ்சலம், அறிவழகி மற்றும் கதிரேசன் ஆகியோர்களை பல்வேறு தேதிகளில் விசாரித்து, தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதன் பின்னர் அவர் பணிமாறுதலில் சென்றதால், நான் இவ்வழக்கை தொடர் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டும், ஏற்கனவே விசாரணை செய்த மணி, கற்பகம் ஆகியோரின் கடன் வவுச்சர் மற்றும் மாதிரி கையொப்பங்களை பெற்றும், தடய அறிவியல் ஆய்வகத்திற்கு தலைமை காவலர் பாஸ்கரன் என்பவர் மூலம் 28/02/2006 அன்று அனுப்பி வைத்தேன். சாட்சிகளை நான் விசாரித்த போது, ஏற்கனவே காவல்

JUDGMENT. IOBR

ஆய்வாளர் ஜெயமோகன் அவர்களிடம் கூறிய விசயங்களையே என்னிடம் சொன்னதால், நான் மீண்டும் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. 22/05/2006 ஆம் தேதி தடய அறிவியல் ஆவண பரிசோதகர் கிருபாகரன் அவர்களை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தும், அவரிடமிருந்து அறிக்கை பெற்றேன். 28/05/2006 ஆம் தேதி வழக்கு விசாரணையை முடித்து, எதிரியின் மீது இதச பிரிவுகள் 408, 477A-ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை :**

எதிரிக்கு போதிய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

***Sd/-***
Judicial Magistrate No.I,
Perambalur.

JM No.I, PBLR